[1992 மார்ச் 17

253—

வேலைவாய்ப்பில்லாத பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்க சிறப்புத் திட்டம்.

*5065 திரு. ப. ரங்கநாதன் :

திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) படித்த வேலைவாய்ப்பில்லாத பட்டதாரி இளைஞர் களுக்கு உடனடி வேலைவாய்ப்பு அளிக்க சிறப்புத் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) படித்து வேலைவாய்ப்பில்லாத பட்டதாரி இளைஞர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு அளிக்க மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக அவர்கள் சுய தொழில் துவங்குவதற்கு சுய வேலைவாய்ப்புத் திட்டம் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலை கோரி பதிந்து வைத்திருப்பவர்கள் எத்தனை பேர் ? இந்த ஆண்டு எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதற்கு, குறிப்பாக அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே 30—6—1991 வரை 3 லட்சத்து 71 ஆயிரத்து 962 படித்த பட்டதாரி இளைஞர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு அளிப்பதற்கு தனி யாக அரசிடம் எந்த சிறப்புத் திட்டமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. ரங்கநாதன் : தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 2 பேர் கேள்வி கேட்டி ருந்தால் ஒவ்வொருவருக்கும் ஒரு துணைக் கேள்விதான்

1992 மார்ச் 17]

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற போது தொழில் மையத்தால் கடன் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். அது உண்மைதான். ஆனால் அந்த தொகை 35 ஆயிரம் ரூபாய் வரை வழங்கலாம் என்று விதி இருந்தும், நேர்முகத் தேர்வுக்கு வரவழைக்கப்பட்டு அவர்களுக்கு ஆர்டர் வழங்குவதாகச் சொல்லி 3 ஆயிரம். 4 ஆயிரம், 5 ஆயிரம் என்று உத்தரவு அனுப்பி அவர்கள் அதையும் பெற முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிற சூழ்நிலை கடந்த காலத்தில்தான் இருந்தது ; இந்தக் காலத்தில் அப்படிப்பட்ட நிலை இல்லாமல் முழுமையாக உருப்படியாக அந்தத் தொழில் செய்வதற்கு முழுமையான தொகையை வழங்கி அவர்கள் ஆக்கமும், ஊக்கமும் பெறுவதற்கு நீங்கள் முயற்சிப்பீர்களா? அப்படி படித்தவர்களுக்கு வேலை கிடைக்கின்ற வரையில் வழங்கப்படுகின்ற உதவித் தொகையை நீட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதி யோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக கடன் வழங்குகின்ற பட்டியலிலே ஒவ்வொரு தொழிலுக்கும் இவ்வளவு என்று அங்கே நிபுணர்கள் குழு முடிவு செய்து அந்த அடிப்படையிலே தொழில்களுக்கு கடன் வழங்கப்படுகிறது. அதை அதிகரிக்கச் செய்வதற்கு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கிய சாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தத் தொழில் மையங்கள் மூலமாக, அதாவது பரிந்துரை செய்யப்பட்டு வங்கிகளில் கடன் தருகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் எனக்குத் தெரிந்த வரை பல்வேறு இளைஞர்களுக்கு நான் பரிந்துரை செய்தும் இதுவரை எந்தக் கடனும் வழங்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, இதை ஒரு சர்க்குலராக அனுப்பி தாங்கள் அந்தத் தொழில் மையங் களுக்கும் வங்கிகளுக்கும் உத்தரவிட வாய்ப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 254. திரு. வெ. பழனிசாமி, திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

254—

விவசாயிகள் உயர்மட்டக் குழுவை மீண்டும் அமைத்தல்.

*3317 திரு. வெ. பழனிசாமி :

திரு. நா. சா. பழனிசாமி :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாயிகள் உயர்மட்டக் குழுவை மீண்டும் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படும் ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : விவசாயிகள் உயர்மட்டக் குழுவை மீண்டும் அமைக்கும் கருத்துரு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய உயர் மட்டக் குழு என்பது, 1980 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் வாக்குறுதியிலே, விவசாயிகளுக்காக அளிக்கப்பட்டது. 1981-ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையிலே ஆட்சி பொறுப்பேற்றவுடன் விவசாயிகளுக்கும் அரசிற்கும் ஒரு இணைப்பு பாலமாக இருக்கிற விவசாய உயர் மட்டக் குழுவை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அமைத்தார்கள். பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழகத்தி